# தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை வகுதியின் சுவடிப்பாதுகாப்பாளர் பயிற்சித் தரம், செவிப்புல- கட்புல ஆவணப் பாதுகாப்பாளர் பயிற்சித் தரம் மற்றும் திரைப்படப் பாதுகாப்பாளர் பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை வகுதியின் சுவடிக்காப்பாளர் பயிற்சியளிப்புத் தரம் மற்றும் செவிப்புல- கட்புல சுவடிக்காப்பாளர் பயிற்சியளிப்புத் தரம் மற்றும் திரைப்படப் பாதுகாப்பாளர் பயிற்சியளிக்கும் தரத்திற்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகுதியுடைய இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| வெற்றிட எண்ணிக்கை - | சுவடிப்பாதுகாப்பாளர் | 19 |
| | செவிப்புல - கட்புல ஆவணப் பாதுகாப்பாளர் | 06 |
| | திரைப்படப் பாதுகாப்பாளர் | 04 |

இவ்வெற்றிட எண்ணிக்கையில் 70% இனர் திறந்த அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்க்கப்படவுள்ள 30% சதவீதத்திற்கான அடிப்படை தகைமையுடன் கூடிய விண்ணப்பதாரிகள் குறித்த திணைக்களத்தில் இல்லாதிருப்பின் மாத்திரம் எஞ்சிய அளவினர் திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் வெளிவாரி விண்ணப்பதாரிகளைக் கொண்டு பூர்த்தி செய்யப்படுவார்கள்.

01. இப்பரீட்சை மூலம் தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை வகுதியின் சுவடிப்பாதுகாப்பாளர் பயிற்சித் தரம், செவிப்புல- கட்புல ஆவணப் பாதுகாப்பாளர் பயிற்சித் தரம், மற்றும் திரைப்படப் பாதுகாப்பாளர் பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள். விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2026..........................ஆந் திகதியாகும். இப்பரீட்சையானது கொழும்பில் மாத்திரம் நடைபெறும். இப்பரீட்சையை ஒத்திவைப்பதற்கோ அல்லது இரத்துச் செய்வதற்கோ தேசிய சுவடிகள் கூடப் பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு.

02. பதவியில் ஒப்படைக்கப்படும் பணிகள்:

| பதவி இலக்கம் | அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர் | பணிகள் |
|---|---|---|
| 01 | சுவடிப்பாதுகாப்பாளர் | தேசிய ஆவணக்காப்பகத் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள ஆவணங்கள், வரைபடங்கள், புகைப்படங்களைப் பாதுகாத்தல் மற்றும் மீளமைத்துப் பேணுதல், மீளமைப்பு நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ள இலக்குகளுக்கமைய விஞ்ஞான ரீதியான அறிவுறுத்தல்கள் மற்றும் தரநிலைகளைப் பின்பற்றிச் செயற்படல், புத்தகக் கட்டமைப்பு தொடர்பான பயிற்சிகளை வழங்குதல், அவசியமான சந்தர்ப்பங்களில் அரச நிறுவனங்கள்/ தனியார் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் ஆவணப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் பங்கெடுத்தல், அரச |

| | | |
|---|---|---|
| | | ஆவணப் பாதுகாப்பிற்குரிய நடைமுறைப் பயிற்சிகளை முன்னெடுத்தல், வழிபாட்டுத் தலங்களிலுள்ள ஆவணப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் பங்கெடுத்தல், பாதிப்பிற்குள்ளான ஆவணங்களை மீளமைப்பது குறித்த நடைமுறைப் பயிற்சிகளை முன்னெடுத்தல், அத்துடன் ஆவணப் பாதுகாப்பு கண்காணிப்பு உத்தியோகத்தர், பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஆவணங்கள்), தேசிய சுவடிகள் கூடப் பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்), தேசிய சுவடிகள் கூடப் பணிப்பாளர் (தொழில்நுட்பம், செவிபுல - கட்புல மற்றும் இலத்திரனியல் ஆவணங்கள்) மற்றும் தேசிய சுவடிகள் கூடப் பணிப்பாளர் நாயகம் ஆகியோரினால் ஒப்படைக்கப்படும் பதவிக்குரிய ஏனைய கடமைகள். |
| 02 | செவிப்புல - கட்புல ஆவணப் பாதுகாப்பாளர் | தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள செவிப்புல - கட்புல ஆவணங்களை பேணிச் செல்லல் மற்றும் பாதுகாத்தல் மற்றும் அவற்றினை ஆய்வு செய்பவர்களுக்கும் செவிமடுப்போருக்கும் கிடைக்கச் செய்தல், அந்த ஆவணங்களின் பிரதிகளை கணனி அல்லது செவிப்புல - கட்புல ஊடகங்களின் மூலம் ஆய்வு செய்பவர்களுக்கு வழங்குதல், செவிப்புல - கட்புல உபகரணங்களின் முகாமைத்துவம், பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புகள், கேட்போர்கூடத்தில் நடாத்தப்படும் விழாக்களுக்கு அவசியப்படும் செவிப்புல - கட்புல உபகரணங்களின் பயன்பாட்டுக்குத் தேவைப்படும் தொழில்நுட்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளல், பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் ( செவிப்புல - கட்புலம்) தேசிய சுவடிகள் கூட பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் ( திரைப்பட மற்றும் செவிப்புல - கட்புலம்), தேசிய சுவடிகள் கூடப் பணிப்பாளர் ( தொழில்நுட்ப, செவிப்புல - கட்புல மற்றும் இலத்திரனியல் ஆவணம்) மற்றும் தேசிய சுவடிகள் கூடப் பணிப்பாளர் நாயகத்தினால் ஒப்படைக்கப்படும் பதவிக்குரித்தான ஏனைய பணிகள் |
| 03 | திரைப்படக் காப்பாளர் | தேசிய ஆவணக்காப்பகத் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள திரைப்படங்களைப் பேணுதல் மற்றும் பாதுகாத்தல், அவற்றை பயனர்களுக்குத் திரையிட்டுக் காட்டுதல், அந்தத் திரைப்படங்களின் பிரதிகளைப் பயனர்களுக்கு வழங்குதல், திரைப்பட உபகரணங்களை நிர்வகித்தல், பராமரித்தல் மற்றும் திருத்துதல், கேட்போர்கூடத்தில் நடைபெறும் நிகழ்வுகளுக்குத் தேவையான திரைப்பட உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கான தொழில்நுட்பக் கடமைகளை நிறைவேற்றுதல், அத்துடன் பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் (திரைப்படம்), தேசிய சுவடிகள் கூடப் பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (திரைப்படம் மற்றும் செவிபுல கட்புல), தேசிய சுவடிக் கூடப் பணிப்பாளர் (தொழில்நுட்பம், செவிபுல கட்புல மற்றும் இலத்திரனியல் ஆவணங்கள்) மற்றும் தேசிய |

| | | |
|---|---|---|
| | | சுவடிகள் கூடப் பணிப்பாளர் நாயகம் ஆகியோரினால் ஒப்படைக்கப்படும் பதவிக்குரிய ஏனைய கடமைகள். |

03. சேவை நிபந்தனைகள்:

(அ) அரச சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொதுவான நிபந்தனைகளுக்கு 2018.06.05 ஆந் திகதிய அரச சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குவிதியில் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், இலங்கை தொழில்நுட்ப சேவையின் சேவைப் பிரமாணங்களுக்கும் அவ்வொழுங்குவிதிகளுக்கு மற்றும் சேவைப் பிரமாணங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இதனகத்து மேற்கொள்ளப்படவுள்ள அல்லது திருத்தங்களுக்கும் தாபன விதிக்கோவையின் மற்றும் நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கும் கட்டுப்பட்டு தேர்ந்தெடுக்கப்படுகின்ற பரீட்சார்த்தி பயிற்சிக் காலப்பகுதியை வெற்றிகரமாக நிறைவு செய்ததன் பின்னர் சுவடிக் காப்பாளர் / செவிப்புல - கட்புல ஆவணப் பாதுகாப்பாளர் / திரைப்படக் காப்பாளர் பதவிக்கு நியமிக்கப்படுவார்கள்.

(ஆ) இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும். இப்பதவி ஓய்வூதியத்துடன் கூடியது எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், எதிர்வரும் காலங்களில் ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள உத்தியோகத்தர்கள் ஓய்வூதியத் திட்டம் குறித்து அரசாங்கத்தினால் தொடர்ந்தேர்ச்சையாக எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானங்களுக்கு கட்டுப்பட்டிருத்தல் வேண்டும். மேலும் நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் / தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றுக்கும் பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் விதத்தில் நீர் அதற்கான பங்களிப்புத் தொகையை செலுத்துதல் வேண்டும்.

(இ) இப்பயிற்சியளிக்கும் தரத்தில் சேர்க்கப்படுகின்ற விண்ணப்பதாரிகள் இரண்டு வருட பயிற்சிக் காலத்தை வெற்றிகரமாக நிறைவு செய்ததன் பின்னர் குறித்த நிறுவனத்தினால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியெய்ததாக வழங்கப்படும் சான்றிதழைச் சமர்ப்பித்ததன் பின்னர் சுவடிக்காப்பாளர் III ஆந் தரத்துக்கு / செவிப்புல - கட்புல ஆவணப் பாதுகாப்பாளர் III ஆந் தரத்துக்கு / திரைப்படக் காப்பாளர் III ஆந் தரத்திற்கும் ஆட்சேர்க்கப்பட்டு 03 வருடங்களினுள் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு ஏற்ப முதலாம் வினைத்திறன் காண் தடைப்பரீட்சைக்கு மேலதிகமாக திணைக்களப் பரீட்சையிலும் சித்தியெய்தல் வேண்டும். இந்நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவை வகுதியின் சுவடிக்காப்பாளர் III ஆந் தரத்துக்கும் / செவிப்புல - கட்புல ஆவணப் பாதுகாப்பாளர் III ஆந் தரத்துக்கும் / திரைப்படக் காப்பாளர் III ஆந் தரத்துக்கும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 03 வருடங்களினுள் ஆட்சேர்ப்பு நடைமுறை ஒழுங்கில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சைக்கு மேலதிகமாக திணைக்களப் பரீட்சையிலும் சித்தியெய்தல் வேண்டும்.

(ஈ) தமக்கு வழங்கப்படும் பதவிக்கு உரித்தான கடமையை உரிய திகதியில் பொறுப்பேற்கத் தவறும் பட்சத்தில் அவ்விண்ணப்பதாரிகளின் நியமனங்கள் இரத்துச் செய்வதற்கு தேசிய சுவடிகள் கூட பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரமுண்டு.

04. மாதாந்த சம்பள அளவுத்திட்டம் :

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 ( அட்டவணை vi) என்ற சுற்றறிக்கைக்கு ஏற்ப, தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை வகுதியின் சுவடிப்பாதுகாப்பாளர் (பயிற்சியளிப்புத் தரம்) மற்றும் செவிப்புல- கட்புல ஆவணப் பாதுகாப்பாளர் (பயிற்சியளிப்புத் தரம்) மற்றும் திரைப்படக் காப்பாளர் (பயிற்சியளிப்புத் தரம்) இற்கு உரித்தான கொடுப்பனவுகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

முதலாம் வருடத்திற்கு மாதாந்தம்: ரூபா. 43, 274/=
இரண்டாம் வருடத்திற்கு மாதாந்தம்: ரூபா. 45, 770/=

இரண்டு வருட பயிற்சிக் காலம் திருப்திகரமாக நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியெய்தும் பயிலுநர்கள் தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை வகுதியின் சுவடிக்காப்பாளர் தரம் III இன் / செவிப்புல - கட்புல ஆவணப் பாதுகாப்பாளர் தரம் III இன் பதவிகளுக்கு நியமிக்கப்படுவார்கள். முன்னைய சுற்றறிக்கையின் படி அதற்குரிய சம்பள அளவுத்திட்டம் (MN 3 - 2025) ரூபா. 52 250/- - 10 x 800 -11x1190 -10 x 1320 – 10 x 1350 - ரூபா.100 040/- (ஆரம்ப சம்பளப் படிமுறை - 52, 250/- ) ஆகும். இதற்கு மேலதிகமாக அரச ஊழியர்களுக்கு அரசினால் அவ்வப்போது செலுத்தப்படும் ஏனைய படிகளுக்கும் தாங்கள் உரித்துடையவராவீர்கள்.

05. ஆட்சேர்ப்பிற்கான தகைமைகள் :

| பதவி | (அ) கல்வித் தகைமைகள் | (ஆ) தொழிற்துறைத் தகைமைகள் | (இ) அனுபவம் |
|---|---|---|---|
| சுவடிப் பாதுகாப்பாளர் (பயிற்சித் தரம்)<br>செவிப்புல - கட்புல ஆவணப் பாதுகாப்பாளர் (பயிற்சித் தரம்)<br>திரைப்படப் பாதுகாப்பாளர் (பயிற்சித் தரம்) | க.பொ.த. (சா.தரம்) பரீட்சையில்<br>சிங்களம் / தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் (06) ஒரே தடவையில் சித்தியெய்திருத்தல் மற்றும் இரு தடவைகளுக்கு மேற்படாத எண்ணிக்கையில் ஆங்கிலப் பாடத்தில் சித்தியெய்திருத்தல்,<br>மற்றும்<br>க.பொ.த உயர்தரப் பரீட்சையில் உயிரியல், பௌதீகவியல் மற்றும் இரசாயனவியல் ஆகிய | ஏற்புடையதற்றது | ஏற்புடையதற்றது |

| | | | |
|---|---|---|---|
| | பாடங்களில் இரண்டு (02) பாடங்களுடன் மொத்தம் மூன்று பாடங்களில் ஒரே தடவையில் (சாதாரண பொது அறிவுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியெய்திருத்தல். | | |

(ஈ) உடற் தகைமைகள்:-

எல்லா விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எப்பாகத்திலும் கடமையாற்றுவதற்கும், பதவிக்குரித்தான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் எல்லா வகையிலும் உடல் மற்றும் உள ரீதியாக தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

(உ) ஏனைய :

I. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
II. நன்நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
III. ஏதேனும் சமயப் பிரிவொன்றின் துறவிப் பதவியை வகிக்கும் ஒருவர் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமை அற்றவராவார்.
IV. பதவியில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு அவசியப்படும் சகல தகைமைகளையும் விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில்/ வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ஊ) வயதெல்லை :

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பதினெட்டு (18) வயதுக்கு குறையாமலும் முப்பது (30) வயதினை விட மேற்படாதிருத்தலும் வேண்டும்.

06. ஆட்சேர்ப்பு முறை :-

எழுத்துப் போட்டிப் பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் சுவடிப் பாதுகாப்பாளர் பயிற்சித் தரம், செவிப்புல- கட்புல ஆவணப் பாதுகாப்பாளர் பயிற்சித் தரம் மற்றும் திரைப்படப் பாதுகாப்பாளர் பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள். எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்தும் விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கிற்கு ஏற்ப திறந்த ஆட்சேர்ப்பிற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையினர் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இப்பயிற்சித் தரத்தில் சேர்க்கப்படும் விண்ணப்பதாரிகள் இரண்டு வருட பயிற்சிக் காலப்பகுதியை வெற்றிகரமாக நிறைவு செய்ததன் பின்னர் குறித்த நிறுவனத்தினால் நடாத்தப்படும் பரீட்சையை சித்தியெய்ததாக வழங்கப்படும் சான்றிதழைச் சமர்ப்பித்ததன் பின்னர் சுவடிப்பாதுகாப்பாளர் தரம் III இற்கு / செவிப்புல - கட்புல ஆவணப் பாதுகாப்பாளர் தரம் III இற்கு / திரைப்படப் பாதுகாப்பாளர் தரம் III இற்கும் ஆட்சேர்க்கப்படுவர். பயிற்சியின் முடிவில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியெய்வதற்குத் தவறுகின்ற பயிலுநர்கள் இருப்பின் அவர்களுக்கு ஆறு (06) மாதங்களுக்கு மேற்படாத காலம் தங்களது பயிற்சிக் காலத்தை நீடிப்புச் செய்ய வாய்ப்பளிக்கப்படுகின்றது. அவ்வாறு நீடிக்கப்படும் காலப்பகுதியின் இறுதியில் மீண்டும் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையாத பயிலுநர்களின் சேவை முடிவுறுத்தப்படும்.

(அ) எழுத்துப் பரீட்சை

இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் மாத்திரம் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பிக்கும் மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பின்வரும் பாடங்களை உள்ளடக்கிய இரண்டு (02) வினாப் பத்திரங்களைக் கொண்டு எழுத்துப் பரீட்சை நடாத்தப்படும். ஒவ்வொரு பாடத்திலும் சித்தியடைய பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய குறைந்தபட்ச புள்ளியின் அளவு பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

| பாடங்கள் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைய பெறவேண்டிய ஆகக் குறைந்தபட்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. நுண்ணறிவுத் தேர்வு | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| 02. தொழில்நுட்பம் ( அவ்வந்த பதவிக்குரிய விடயப் பரப்புடன் கூடிய பரீட்சையாகும்.) | 02 மணித்தியாலம் | 100 | 40 |

பரீட்சார்த்திகள் சகல வினாப் பத்திரங்களுக்கும் தோற்ற வேண்டும் என்பதோடு அனைத்து வினாக்களுக்கும் ஒரே மொழி மூலத்தில் மாத்திரம் விடையளித்தல் வேண்டும்.

i. பரீட்சை பெறுபேறுகள் - விண்ணப்பதாரர்களுக்குப் பரீட்சை பெறுபேறுகளை அறிவித்தல், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் தபால் மூலம் அல்லது www.slida.lk எனும் இணையத்தளத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

07.பரீட்சைக்கான பாடத் திட்டம் :

| வினாத் தாளின் பெயர் | பாடத் திட்டம் |
|---|---|
| 01. நுண்ணறிவுத் தேர்வு | பரீட்சார்த்தியிடம் காணப்படும் பொது நுண்ணறிவு, தர்க்க ரீதியான திறன், கருத்து வெளிப்பாட்டுத் திறன், எண்ணியல் திறன் மற்றும் கிரகித்தல் திறன் ஆகியவற்றை அளவிடுவதே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. |
| 02. தொழில்நுட்பம் - அந்தந்த பதவிக்குரிய தொழில்நுட்ப மற்றும் விடயப்பரப்புடன் கூடிய பரீட்சையாகும். | பதவிக்குரிய தொழில்நுட்ப அறிவை அளவிடும் செயற்பாடு இதனால் எதிர்பார்க்கப்படுகின்றது. |

08. பரீட்சைக் கட்டணம் :

பரீட்சைக் கட்டணம் ரூபா. 1200 ஆகும். மேலும், அந்தப் பரீட்சைக் கட்டணத்தை “தேசிய சுவடிகள் கூடப் பணிப்பாளர் நாயகம்” எனும் பெயரில் மக்கள் வங்கியின் திம்பிரிகஸ்யாய கிளையிலுள்ள 086-1001-3902-6218 எனும் வங்கிக் கணக்கிலக்கத்தில் வைப்புச் செய்து, விண்ணப்பதாரரின் பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை, அதன் ஒரு விளிம்பின் ஊடாக விண்ணப்பப்பத்திரத்தின் குறித்த இடத்தில் கழன்று விடாதவாறு ஒட்டப்படுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணமாக காசுக் கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன், பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன் வேறு பரீட்சை ஒன்றிற்கு மாற்றப்படவும் மாட்டாது. அவ்வாறே பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டின் பிரதியொன்றைத் தம்வசம் வைத்துக்கொள்வது பயனளிக்கும்.

09. விண்ணப்பிக்கும் முறை :

(அ) விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும் போது பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பத்தில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பத்தில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் இவ் அறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கு ஏற்ப அமைதல் வேண்டும் என்பதோடு, அது 8 1/2 " x 12 " என்ற அங்குல (ஏ 4) அளவுடைய கடதாசியில் விண்ணப்பதாரி தனது சொந்த கையெழுத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும். கணனியினால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தையும் பயன்படுத்த முடியும். விண்ணப்பப்படிவம் ஒரு மொழியில் மாத்திரம் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் தலைப்புகள் இலக்கம் 01 தொடக்கம் 07 வரை முதல் பக்கத்தில் உள்ளடங்கும் வண்ணம் தயாரித்தல் வேண்டும்.

(ஆ) மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கிய வகையில் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும், முழுமையான தகவல்களைக் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். (பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக்கூடும்.) பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாக உள்ளதா என்பதை விண்ணப்பதாரரி உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அவ்வாறில்லாது விடின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட முடியும்.

(இ) பரீட்சைக்காக நிரப்பிய விண்ணப்பப்படிவத்தை பதிவுத் தபாலில் 2026……… ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் "தேசிய சுவடிகள் கூடப் பணிப்பாளர் நாயகம், தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களம், பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு 07." என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் " தேசிய சுவடிகள் காப்பக திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவைகள் வகுதியின் ........................................................................................ பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025" என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். 2026..................... ஆந் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ஈ) விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, முப்படையில் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட பதவியொன்றில் வகிக்கும் உத்தியோகத்தர், அரசின் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் பதவிநிலை தரத்துடைய உத்தியோகத்தரினால் அல்லது சான்றுப்படுத்திருத்தல் வேண்டும்.

(உ) முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் விண்ணப்பப்படிவம் காணாமற் போதல் அல்லது தாமதமடைதல் பற்றிய எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.விண்ணப்ப முடிவுத் திகதி வரை விண்ணப்பப்படிவத்தை தாமதப்படுத்துவதனால் ஏற்படக்கூடிய இழப்புக்கு விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்க வேண்டும்.

(ஊ) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாக எந்தவொரு அறிவித்தலும் வழங்கப்பட மாட்டாது. பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின் படி, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதற்குரித்தான பற்றுச்சீட்டுடன் திருத்தமாக பூர்த்தி செய்துள்ள விண்ணப்பங்களை அனுப்பி வைத்த விண்ணப்பதாரிகளுக்கு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் அனுப்பி வைக்கப்படும். (பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாக அறிவித்து அறிவித்தலொன்று இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.slida.lk) பிரசுரிக்கப்படும். அறிவித்தல் வெளியாகி 03 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்தி எவரேனும் இருப்பின், அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு அது குறித்து இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் (SLIDA) பரீட்சைக் கிளையின் 011-5980264 அல்லது 011-5980225 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 08.30 முதல் பி.ப. 4.00 மணி வரை வினவ முடியும். அவ்வாறு வினவும் போது விண்ணப்பதாரி தான் தோற்றும் பரீட்சையின் பெயர் , விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை திருத்தமாக குறிப்பிடுதல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தினால் வினவப்படும் ஏதேனுமொரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக தன்வசம் உள்ள விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபாலில் அனுப்பும் போது பதிவு செய்யப்பட்ட பற்றுச் சீட்டினையும் தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும். அதேபோன்று, பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட அனைத்துப் பரீட்சார்த்திகளுக்கும் அது குறித்து அறிவிக்கும் குறுஞ்செய்தி (SMS) ஒன்று இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தினால் அனுப்பிவைக்கப்படும்.

10. பரீட்சைக்கு தோற்றுதல் :

(அ) சகல விதத்திலும் முழுமைப்படுத்திய விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படும். தனது பரீட்சை அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பிக்காத எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி அளிக்கப்பட மாட்டார்கள்.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். சகல பரீட்சார்த்தியும் குறித்த பரீட்சை மண்டபத்திற்கு தமக்குரிய அனுமதி அட்டையில்,

தமது ஒப்பத்தை உறுதிப்படுத்தி முதலில் அம்மண்டபத்தில் தோற்றுகின்ற நாளில், அம்மண்டப பொறுப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு சகல பரீட்சார்த்திகளும் கீழ்ப்படிதல் வேண்டும். அப்பரீட்சை விதிமுறைகளை மீறுகின்ற பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

குறிப்பு :- பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதானது, அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமைகளைப்
பூர்த்தி செய்தவராகவும், அங்கீகாரம் பெற்றவராகவும் கருதப்பட மாட்டார்.

(இ) பரீட்சார்த்தி / பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தான் தோற்றும் சகல பாடங்களுக்கும் பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்.

I. தேசிய அடையாள அட்டை
II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்

அவ்வாறே பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் தங்களது முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். அதேபோன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்பத்தினுள் உள்நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

11. போலியான தகவல்களுக்கான தண்டனை :

எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் என தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்தத்தன்மையை இரத்துச் செய்வதற்கு வாய்ப்பிருக்கின்றது. பரீட்சார்த்தியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் போலியானது என தெரிந்து வேண்டுமென்றே சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக அறியவந்தால், அவ்வாறில்லையெனில், ஏதேனும் முக்கியமான தகவலை அவர் வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவரை அரச சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்வதற்குரிய நடவடிக்கையும் எடுக்கப்படும். பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு சகல பரீட்சார்த்திகளும் கீழ்ப்படிதல் வேண்டும்.

12. ஏனைய விடயங்கள்

இவ்விதிமுறைகளில் கருத்திற் கொள்ளப்படாத விடயங்கள் தொடர்பில் தேசிய சுவடிகள் கூடப் பணிப்பாளர் நாயகத்தின் முடிவின் படி நடவடிக்கை எடுக்கப்படும்.

13. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலின் மொழிப் பதங்களுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மை மற்றும் ஒவ்வாமை இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

தேசிய சுவடிகள் கூடப் பணிப்பாளர் நாயகம்,
தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களம்
2026...............................ஆந் திகதி
இலக்கம் 07
பிலிப் குணவர்தன மாவத்தை
கொழும்பு 07
தேசிய ஆவணக் காப்பகத் திணைக்களத்தில்.

# மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

அலுவலக உபயோகத்திற்காக

**தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை வகுதியைச் சேர்ந்த ....................................... பயிற்சித் தரத்திற்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026**

**Open Competitive Examination for Recruitment to the Training Grade of ........................................................................................ in the Supervisory Management Assistant Technical Service Category of the Department of National Archives - 2026**

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

விண்ணப்பிக்கும் பதவி / பதவிகள் :

| தெரிவுகள் | பதவி இலக்கம் |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |

(வர்த்தமானி அறிவித்தல் 02 ஆம் பந்தி பிரகாரம் இலக்கமிடவும்.)

1. முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :

..........................................................................................................................................

..........................................................................................................................................

(உதா: HERATH MUDIYANSELAGE SAMAN RATHNAYAKA)

2. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :

..........................................................................................................................................

(உதா: H.M.S. RATHNAYAKA)

3. முழுப் பெயர் (சிங்களத்தில்) :

..........................................................................................................................................

4. நிரந்தர முகவரி (சிங்களத்தில்) :

..........................................................................................................................................

..........................................................................................................................................

(அ) அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி ( சிங்களத்தில்) :

..........................................................................................................................................

..........................................................................................................................................

(ஆ) அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி ( ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :

..........................................................................................................................................

..........................................................................................................................................

5. பெண் /ஆண் பால் நிலை : பெண் ☐ ஆண் ☐

6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

7. (அ) கையடக்கத் தொலைபேசி இலக்கம்:

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

(ஆ) மின்னஞ்சல் முகவரி (e-mail) : ..........................................................................................................

8. (அ) பிறந்த திகதி :

வருடம் : | | | | |  மாதம் : | | |  திகதி : | | |

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :

வருடம் : | | | | |  மாதம் : | | |  திகதி : | | |

9. விண்ணப்பிக்கும் பயிற்சித் தரம்: ................................................................

10. கல்வித் தகைமைகள் :

(அ) க.பொ.த (சா/தர) - முதற் தடவை

பரீட்சைக்குத் தோற்றிய வருடம் :

பரீட்சை சுட்டிலக்கம் :

| **பாடம்** | **சித்திகள்** | **பாடம்** | **சித்திகள்** |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(அ) க.பொ.த (சா/த) - இரண்டாம் தடவை

பரீட்சைக்கு தோற்றியவருடம் :

பரீட்சை சுட்டிலக்கம் :

| **பாடம்** | **சித்திகள்** | **பாடம்** | **சித்திகள்** |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(இ) க.பொ.த (உ/தர)

பரீட்சைக்கு தோற்றிய வருடம் :

பரீட்சை சுட்டிலக்கம் :

| பாடம் | சித்திகள் | பாடம் | சித்திகள் |
|---|---|---|---|
| | | | |
| | | | |

11. பரீட்சைக் கட்டணம் ( பற்றுச்சீட்டை இணைத்து அனுப்புதல் வேண்டும்.)

(அ). செலுத்தப்பட்ட வங்கி : ......................................................................................................

(ஆ). செலுத்திய தொகை :……………………………………………………

(இ). செலுத்திய திகதி : .....................................................................

(ஈ). பற்றுச்சீட்டு இலக்கம் : ..................................

பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கே ஒட்டவும்.
(பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக்கூடும்.)

12. விண்ணப்பதாரியின் சான்றுரை/ சான்றிதழ் :

இவ் விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு மற்றும் நம்பிக்கையின் பிரகாரம், உண்மையானதும் சரியானதும் என சான்றுரைக்கின்றேன். வழங்கப்படும் தகவல்கள் போலியானது என நான் தெரிவு செய்யப்பட முன்னர் தெரியவருமாயின் நான் தகுதியற்றவர் எனவும், நியமனம் செய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து எந்தவொரு இழப்பீடும் இன்றி நான் சேவையிலிருந்து இடைநிறுத்தப்படுவதற்கும் கட்டுப்பட்டுள்ளேன் என அறிந்திருக்கின்றேன். (இ) மேலும், பரீட்சை நடாத்துவது தொடர்பாகவும் அதன் பெறுபேறுகளை வெளியிடுவது குறித்தும் இலங்கை நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கும் நான் கட்டுப்பட்டுள்ளேன் எனவும் சான்றுரைக்கின்றேன்.

திகதி :..............................

ஒப்பம் :.......................................

13. விண்ணப்பதாரியின் ஒப்பத்தை சான்றுப்படுத்தல் : **(ஏற்புடையதற்ற சொற்களை நீக்கவும்.)**

இவ்விண்ணப்பப்படிவத்தினை சமர்பிக்கின்ற திரு / திருமதி/ செல்வி ........................................................................................ ஆகிய நான் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் எனவும், அவர் .................................................. மாதம்........................................................................ ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பம் இட்டதாகவும், உரிய பரீட்சைக் கட்டணம்

செலுத்தப்பட்டுள்ளது எனவும், அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதாகவும் இதனால் சான்றுப்படுத்துகின்றேன்.

சான்றுப்படுத்துநரின் கையொப்பம் : ..........................................................................

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப் பெயர் :- ..........................................................................

பதவி:…………………………..…………………………..…...…

முகவரி:…………………………..…………………………..

(உத்தியோகபூர்வ இறப்பர் பதவி முத்திரை)

திகதி ....................................................................................

குறிப்பு : விண்ணப்பத்தை சான்றுப்படுத்த வேண்டியது வர்த்தமானி அறிவித்தலின் 9 ஆம் பந்தியில் (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

14. நிறுவனத் தலைவரின் பரிந்துரை :

இவ்விண்ணப்பப்படிவத்தினை முன்வைக்கின்ற திரு / திருமதி / செல்வி................................................. என்பவர் இவ்வமைச்சில் / திணைக்களத்தில் / கூட்டுத்தாபனத்தில் / சபையில் சேவையில் பணியாற்றுகின்றார் என்பதோடு, அவர் மேற்படி பதவிக்காக தேர்ந்தெடுக்கப்படுவாராயின் இந்நிறுவனத்தின் சேவையில் இருந்து விடுவிக்க முடியும்.

..............................................................................

நிறுவனத் தலைவரின் கையொப்பம் உத்தியோகபூர்வ இறப்பர் பதவி முத்திரை

திகதி : .......................................

நிறுவனத் தலைவரின் பெயர் : ..........................................................................

பதவி :…………………………..…………………………..…...…

சேவை நிலையத்தின் முகவரி: ..........................................................................